[illegible] நான்கு    Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

[illegible] 2024 ஆவணி 22 செவ்வாய்க்கிழமை (07-09-1993) UTHAYAN — A lively National Tamil Daily மலர் 283

# கூட்டுப்படை கட்டளையகம் நேற்றுக் கலைக்கப்பட்டது!

## புதிதாக ஒருங்கிணைப்புக் குழு

கொழும்பு, செப்டெம்பர் 7

இது வரை வடக்கு, கிழக்கில் ஸ்ரீலங்காவின் இராணுவ நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்தி வந்த கூட்டுப்படைகள் நடவடிக்கைகள் கட்டளையகம் (Joint Operation Command) நேற்று ஜனாதிபதியால் கலைக்கப்பட்டது.

அதற்குப் பதிலாக —

"பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு" (Dcfence Cordinating Committe) என்ற புதிய உயர்நிலை அமைப்பை ஜனாதிபதி உருவாக்கி உள்ளார்.

புதிதாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு முக்கியமான திட்டங்களை வகுப்பதுடன்—

முப்படையினருக்கும், விசேட அதிரடிப்படையினருக்கும், பொலீஸாருக்கும் முக்கியமான பணிப்புரைகளை வழங்குவதற்கும் பொறுப்பாக இருக்கும்.

தேவையேற்படுமிடத்து, முக்கியமான பகுதிகளில் ஒன்றிணைந்த கட்டளைப் பணியகங்களை நிறுவவும் —

ஸ்ரீலங்கா படைகளின் கூட்டு நடவடிக்கைகளைத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் பதவி:

## வோல்டர் திடீர் ராஜினாமா! அந்தஇடத்துக்குஹமில்டன்

கொழும்பு, செப். 7

கூட்டுப்படைகள் நடவடிக்கைகள் கட்டளையகம் கலைக்கப்பட்ட அதேவேளை, இது வரை பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகக் கடமையாற்றிய எயர்மார்ஷல் வோல்டர் பெர்னாண்டோ அப்பதவியை இராஜினாமாச் செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

கலைக்கப்பட்ட கூட்டுப் படைகள் நடவடிக்கைகள் கட்டளையகத்தின் தளகர்த்தராக இதுவரை செயற்பட்ட ஹமில்டன் வனசிங்க — பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக — எயர்மார்ஷல் வோல்டர் பெர்னாண்டோவின் இடத்துக்கு — நியமிக்கப்பட்டார்.

புதிய நியமனம் பற்றிய அறிவிப்பை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க நேற்று விடுத்தார்.

சொந்தக் காரணங்களுக்காகத்தான் தாம் ராஜினாமாச் செய்ததாக வோல்டர் பெர்னாண்டோ கூறியிருந்தாலும் —

இராணுவத்தில் நிலவி வரும் கோஷ்டிப் பூசலின் ஓர் அம்சமாகவே ராஜினாமா இடம்பெற்றது என "வெரித்தாஸ்" வானொலி குறிப்பிட்டது.

(உ-எ-ஃ-3-6-162)

## புதிய மாற்றங்களின் பின்னர் பாரிய ராணுவ நடவடிக்கை?

லண்டன், செப். 7

பாதுகாப்புத் துறையில் அரசு கொண்டு வந்திருக்கும் கட்டமைப்பு மாற்றம் புதிய — பாரிய — இராணுவ நடவடிக்கைகளுக்கு வழி வகுக்கும்.

— இவ்வாறு கொழும்பு பல்கலைக்கழகத்தின் அரசியல் துறைப் பேராசிரியர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து பி.பி.ஸிக்கு அளித்த வெளியீட்டில் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணக் குடாநாடு மீது அரசு புதிய தாக்குதல்களை ஆரம்பிக்கக் கூடும் என்று புலிகள் நம்புகிறார்கள். அரசின் புதிய கட்டமைப்பு அதனைச் செய்யுமா?" — என்று கேட்கப்பட்டபோது கலாநிதி சரவணமுத்து கூறியதாவது:-

"ஆம். அது சரிதான். புதிய கட்டமைப்பு ஏதோ வகையில் புதிய தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## உண்மையான தீர்வுக்கு நேரடிப் பேச்சு அவசியம்

### சிங்கள நாளிதழுக்கு யாழ். அரச அதிபர் பேட்டி

கொழும்பு, செப். 7

"வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட எல்லா முயற்சிகளும் வெற்றியடையாமல் போனமைக்கு அரசியல் ரீதியான, உண்மையான புரிந்துணர்வு இல்லாமல் போனதே காரணம்.

"உண்மையான தீர்வு காணப்பட வேண்டுமானால், அரசும் புலிகள் இயக்கமும் நேரடியாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். பேச்சுவார்த்தை சம்பந்தமான விவரங்கள் பொது மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். இதனால் சமாதானத்தை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தென் மாகாண இளைஞர் படையில் சேர பின்னடிப்பு

இராணுவத்திற்கு அண்மையில் ஆட்திரட்டியபோது தென் மாகாணத்தில் இருந்து சிங்கள இளைஞர்கள் போதுமான அளவு படையில் சேர முன்வரவில்லை என்றும் —

இது இராணுவத்துக்கு ஏமாற்றத்தை அளித்தாகவும் "த ஐலண்ட்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

குருணாகலை மாவட்டத்தில் இருந்து ஆகக் குறைந்த எண்ணிக்கையினர் தான் படையில் சேர்ந்தனர் என்றும்—

அனுராதபுரம் மாவட்டத்தில் இருந்து தான் கூடுதலானோர் படையில் சேர்ந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

போர்முனைக்கு அருகில் அனுராதபுரம் இருக்கிறது. கூட்டுப்படைகள் தலைமையகமும் அனுராதபுரத்தில் தான் இயங்கி வந்தது என்றும் அச் செய்தியில் [illegible] காட்டப்பட்டது. (உ-எ)

## குமாரியில் தபால்கள்!

நேற்று முன்தினம் பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'குமாரி' கப்பலில் குறிப்பிட்ட எண்ணிக்கையான தபால் பொதிகள் வந்து சேர்ந்துள்ளமை நேற்று தெரியவந்ததாக யாழ். செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் கப்பல் வந்து சேர்ந்ததும், கப்பலின் மேல்தட்டில் தபால்பொதிகள் இல்லாததால், தபால்பொதி [illegible] கப்பலிலிருந்தது. (உ-8)

## பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவில் எட்டுப் பேர்

கொழும்பு, செப். 7

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கும் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கவின் தலைமையின் கீழ் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு செயற்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஹமில்டனுடன் இக்குழுவில் எட்டுப் பேர் இடம்பெறுவர்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர், முப்படைகளின் தளபதிகள், பொலீஸ் மா அதிபர், தேசிய புலனாய்வு பணியகத்தின் பணிப்பாளர், விசேட அதிரடிப் படையின் தளபதி ஆகியோர் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவில் இடம் பெறும் ஏனையோராவர்.

## அதிகாரங்களைப் பகிரவே புதிய குழு அமைப்பாம்

கொழும்பு, செப், 7

அதிகாரங்களைப் பரவலாக்கும் நோக்குடனேயே பாதுகாப்புத் துறையில் புதிய மாற்றங்கள் செய்யப்பட்டன என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் கூறியதாக வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

புதிய மாற்றங்களின்படி பாதுகாப்புப் படைகளின் தளபதிகள் மேலும் விரிவுபடுத்தப்பட்ட வகையில் ஒருங்கிணைந்து செயற்படுவர் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

## கோவில்போரதீவில் படையினர் அட்டகாசம்

மட்டக்களப்பு மாவட்டம் கோவில் போரதீவு பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பொது மக்கள் மீது நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார்.

கடந்த வெள்ளியன்று பிற்பகல் 3 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றது.

வெல்லாவெளி, பெரியபோரதீவு ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து கோவில் போரதீவு, உருகாமம் என்ற இடத்துக்கு வந்த இராணுவத்தினர் அங்கு கண் மூடித்தனமான தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலில் ஒருபிள்ளையின் தந்தையான கோபால பிள்ளை என்பவர் உயிரிழந்தார்.

இதனையடுத்து இப்பகுதியில் இருந்த எட்டு வீடுகளையும், இரண்டு கடைகளையும் இராணுவத்தினர் தீ வைத்து எரித்தனர். (உ-8)

## மஹர சிறையில் தப்பமுயன்ற 5 கைதிகள் சுட்டுக்கொலை

### நேற்று அதிகாலை சம்பவம்

கொழும்பு, செப். 7

மஹர சிறைச்சாலையிலிருந்து நேற்று அதிகாலை புகைக் குண்டுகளை வெடிக்க வைத்தவாறு சுமார் இருபத்தியைந்து கைதிகள் தப்பியோட முயன்றனர் என்றும் —

அப்போது சிறைப்பாதுகாவலர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் கைதிகளில் ஐவர் உயிரிழந்தனர் என்றும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த ஐந்து கைதிகளில் மூவர் ஜே. வி. பி. சந்தேக நபர்கள் என்றும் —

ஏனைய இருவரும் கொள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மற்றொரு முகாமை தாக்க புலிகள் தயாராகின்றனர்?

கொழும்பு, செப். 7

மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் போன்று இன்னொரு இராணுவமுகாம் மீது தாக்குதலை நடத்த விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாக இராணுவத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி இத்தகவலை "சண்டே ரைம்ஸ்" வெளியிட்டிருக்கிறது.

இதனைத் தொடர்ந்து —குறிப்பாக கிழக்கில் உள்ள— இராணுவ முகாம்களின் உள்ளேயும் வெளியேயும் பாதுகாப்பை பலப்படுத்தும்படி இராணுவத் தலைமையகம் உஷார் உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது. (உ-எ)

## அ. தி. மு. க. - புலிகள் இடையே உறவாம்!

### காங்கிரஸ் தலைவர் சொல்கிறார்

சென்னை, செப். 7

அ. தி. மு. கவிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புதிய உறவு ஏற்பட்டுள்ளதா?

இவ்வாறு சந்தேகம் எழுப்பினார். தமிழக சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.

நேற்று சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போதே அவர் இவ்வாறு சந்தேகம் எழுப்பினார்.

விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும்

(3 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

8½ பரப்புடன் கூடிய இரட்டை வீடு சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. 7 படுக்கை அறைகள், 3 கழிவறைகள், 3 சமையலறைகள், 3 குளியலறைகளும், விசாலமான பல்கணியையும் கொண்டது. தனியாகவோ இருவர் சேர்ந்தோ வாங்கலாம். அலுவலகங்கள், திணைக்களங்கள் நடத்தவும் ஏற்றது. அமைதியான சுற்றாடலில் உள்ளது. க. புவனம், 99, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (6466)

### காசாளர் தேவை

சுச்சேரிக்கு அண்மையில் இயங்கி இருக்கும்வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு தகுதியுள்ள பெண் காசாளர் தேவை. உரிய வேதனம் வழங்கப்படும். பிணை நிற்பதற்கு தராதரம் உடைய நபர் ஒருவரின் சிபாரிசுடன் தொடர்பு கொள்ளவும்; இல. 559,மே/பா உதயன்யாழ்ப்பாணம். (27207)

### வியாழமாற்றம் நன்மையா

12 - 10 - 93இல் நிகழும் வியாழமாற்றம் நன்மை பயக்குமா? உலக - இலங்கை பலன்கள் உட்பட 12 இராசிகளுக்குமான பலாபலன்கள் வெளியீடு! திருக்கணித நிலையம், 10/- மட்டுமே. இடைக்கும் இடம்: மர்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (27180)

## மண்எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 7

யாழ். பல்கலைக்கழகத்தில் இறுதியாக நடைபெற்ற மண்எண்ணெய் விநியோகத்தின்போது பெறத் தவறியோர் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-30 மணி முதல் களஞ்சியப் பகுதியில் அதனைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் இன்றுடன் ஒதுக்கப்பட்ட மண்எண்ணெய் விநியோகம் நிறைவுறும் எனவும் அறிவிக்கப்படுகிறது. (க)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப். 7

யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி இன்ரறக்ட் கழகத்தின் முதலாவது மண்டபம் ஐந்திற்கான கருத்தரங்கு கடந்த 30ஆம், 31ஆம் திகதிகளில் நடைபெற்றது.

முதல் நாள் இடம்பெற்ற தொடக்க விழாவில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி திரு. பியட் சுவெச்சர் பிரதம விருந்தினராகவும்- யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி முதல்வர் வண. பேர்னாட் அடிகள் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (க-5)

## மீனுக்கு தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், செப். 7

குடாநாட்டில் மீன் மற்றும் கடல் உணவுகளின் விலைகள் கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளன. இவற்றுக்கு தட்டுப்பாடும் நிலவுகிறது.

அரசாங்கம் கடலில் வள்ளங்கள் செல்வதற்கு தடைவிதித்திருப்பதால் மீனவர்கள் குறிப்பிட்ட தூரத்துக்கு அப்பால் சென்று மீன் பிடிப்பதற்கு அச்சம் கொண்டுள்ளனர்.

மீனவர்கள் கரைவலையை பாவித்து கரையோரப் பகுதிகளில் கட்டுமரம், சிறிய வள்ளம் ஆகியவற்றில் சென்றே மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். (இ-17)


BECON
STANLEY ROAD,
JAFFNA.
விலங்கியல்
மீட்டல் வினா - விடை
வகுப்பு
பிரிவு: III
வியாழன் 3 - 6 p. m.
ஆசிரியர்:
திரு. கெங்காதரன்
ஆரம்பம்:
09 — 09 — 1993
வியாழன் 3 p. m.
(சி/6042)


## 17ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 12 — 05 — 1916

மறைவு: 14 — 09 — 1976

திருமதி

### இரத்தினாம்பிகை நல்லையா

திதி: 07 — 09 — 1993

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய்த் திகழ்ந்த எம் அன்னைக்கு இதய அஞ்சலிகள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டன்.

195, செம்பன்னை வீதி,
யாழ்ப்பாணம். (27209)

## 31ஆவது நாள் நினைவஞ்சலி



மலர்வு: 01 — 06 — 1918

மறைவு: 08 — 08 — 1993

திருமதி

### கனகரத்தினம் செல்லக்கண்டு

மாதம் ஒன்று சென்றதம்மா
ஆறவில்லை எம் துயரம்
ஆண்டு பல சென்றாலும்
மாறாது எம் சோகம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.

கட்டுடை,
மானிப்பாய். (27202)

## முதலாம் ஆண்டு முடிவுறா நினைவுகள்



தோற்றம்: 21 — 12 — 1923

மறைவு: 19 — 08 — 1992

அமரர்

### ஆசைப்பிள்ளை நல்லதம்பி

(சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், வவுனியா ஜோதி ரெக்ஸ்ரைலின் உரிமையாளரும்)


திதி: 07 — 09 — 1993

எண்ணில சேவைகளை எமக்களித்த ஏந்தலே!
கண்ணாலே நாம் கண்ட கடவுளே! கற்பகமே!
விண்ணோரை மகிழ்விக்க விரைந்திட்ட உங்களுக்கெம்
கண்ணீரே அன்றி வேறு காணிக்கை யேது அப்பா!

என்றும் மறவாத துணைவி:
ந. யோகேஸ்வரியும்,
பிள்ளைகளும்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம். (27198)


முத்தமிழ் கலா மன்றம்
வழங்கும்
மாபெரும் கலை விழா
இடம்: யாழ். இந்து மகளிர் கல்லூரி
காலம்: 10 — 09 — 1993 வெள்ளிக்கிழமை
நேரம்: மாலை 6-00 மணி
இனியொருவிதிசெய்வோம்
(நாடகம்)
காத்தவராஜன்
(சிந்துநடைக் கூத்து)
வானம்பாடி இசைக் குழுவின்
இன்னிசை தேன் மழை
பிரவேசம்: ரூபா 20/- 10/-
இசைக்குழுவினரின் இயக்குனர்கள்
இசையமைப்பாளர்: — எஸ். பொன்னுத்துரை
இணையமைப்பாளர்: — ஆர். பி. வில்மன்
அன்பளிப்பு:


எஸ்-எம்-பெர்ஞன்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி அருகில்)
யாழ்ப்பாணம்.
(இ-5888)



உடுவில் மகளிர் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
G.A.Q., B.A. (Part I)
விரிவுரைகள்
ஆரம்பம்: 08 - 09 - 1993
புதன் 3 மணி
குறிப்பு:
புதிய அனுமதிகளும் வழங்கப்படுகிறது.
(சி-5879)



யாழ்ப்பாணக் கல்லூரி
வட்டுக்கோட்டை
JAFFNA COLLEGE 1823 1872 CEYLON
நடனம் கற்பிக்கும்
ஆசிரியை
உடனடியாகத் தேவை
நன்கு பயிற்றப்பட்டவர்களும், அனுபவம் வாய்ந்தவர்களும் மாத்திரம் சான்றிதழ்களுடன் இம் மாதம் 10ஆம் திகதி காலை 10 மணிக்கு நேரில் வரவும்.
- அதிபர்.
(இ-5887)


## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்: 04 — 05 — 1937

ஆண்டவன் அடியில்: 19 — 08 — 1992

### திருமதி கமலாதேவி இராஜதுரை

திதி: 07 - 09 - 1993

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஓராண்டுகள் சென்றாலும், உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாது.

தங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், அக்கா,
அண்ணா, தங்கை.

"...கணேசன்தான்",
சித்தன்கேணி. (27208)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பிரேமாவை விஞ்சும் விஜே!

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்திருக்க வேண்டும் என்று கிழக்கில் வாழும் மக்கள் விருப்பம் தெரிவிக்கவில்லை.

இவ்வாறு ஒரு புதிய கண்டுபிடிப்பை ஜனாதிபதி விஜேதுங்க வெளியிட்டிருக்கிறார்.

வடக்கும் கிழக்கும் இணைந்திருக்க வேண்டுமா என்பது குறித்து, கிழக்கு மாகாண மக்களின் விருப்பத்தை அறிவதற்காக சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் (சிங்கள எம். பிக்கள் குழுவின்) யோசனையை செயலாக்க முயன்றவர் ஜனாதிபதி. ஆனால் கிழக்கில் தேர்தலை நடத்தக் கூடிய அமைதி நிலை இப்போதைக்கு உருவாகமாட்டாது என்பதை அறிந்து அதனைக் கைவிட்டார்.

பின்னர் கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தப் போவதாக நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வதற்கான திகதியும் நிர்ணயிக்கப்பட்டது. அதற்குரிய காலக்கனியவில்லை என்று தெரிவிக்கப்பட்டதால் பின்னர் அதுவும் கைவிடப்பட்டது; ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு-கிழக்கு இணைப்புச் சம்பந்தமான சர்வசன வாக்கெடுப்பை கிழக்கில் மட்டுமன்றி வடக்கிலும் நடத்த வேண்டும் என்ற 1987இன் ஒப்பந்தச் சரத்துப் பிரகாரம் வாக்கெடுப்புகளை அடுத்த வருடத்துக்கு ஒத்தி வைக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டவரும் ஜனாதிபதியே. அவ்வாறிருக்க வடக்கு - கிழக்கு இணைப்பைக் கிழக்கு மக்கள் விரும்பவில்லை என்பதனை எங்கே கண்டுபிடித்தார்? எதன் மூலம் அறிந்து கொண்டார்?

தாம் சர்வவல்லமையும், அதிகாரங்களும் கொண்ட ஜனாதிபதி என்பதால், தாம் நினைத்ததைச் சொல்லலாம்; அதனை மக்கள் சரியானது உண்மையானது என்று ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறார்?

வடக்கும் கிழக்கும் சேர்ந்ததே தமிழர்களின் தாயகம். அது பிரிக்க முடியாதது. இப்போது இணைந்திருப்பது. அந்த இணைப்பை நிரந்தரமாக்கிவிட்டால், அது தமிழர்கள் தனிநாடு ஒன்றை உருவாக்குவதற்கு அத்திவாரம் இட்டுக் கொடுத்ததாக ஆகிவிடும். எனவே எத்தனை ஆயிரம் உயிர்களின் அழிவின் மத்தியிலும், எத்தனை கோடி ரூபா செலவானாலும் வடக்கு - கிழக்கைப் பிரித்துவிட வேண்டும் என்பதே பேரினவாதக் கோட்பாடு.

அந்தக் கோட்பாட்டை நிலைநிறுத்தி வெற்றி அடைய வேண்டும் என்பதற்காக, இணைப்பைக் கிழக்கு மக்கள் விரும்பவில்லை என்ற கருத்தை வலிந்து திணித்து அதுவே உண்மையெனக் காட்டும் குள்ளத்தனமான, நரித்தனமான தந்திரம் இது. எண்ணப் புனைவை மெய்யாகக் காட்டும் ஏமாற்றுத் தனமும் ஆகும்.

வடக்கு-கிழக்கைப் பிரித்து விடுவதில் இவர் சிங்களப் பேரினவாதத்துடன் போட்டியிட்டு வென்று விடுவார் போலத் தெரிகிறதே! இவர் பிரேமதாசாவையும் வெல்லும் ''காரியக்கட்டி'' யாக விஞ்சி விடுவார் எனவும் தோன்றுகிறது!

அதுமட்டுமல்ல, வடக்கு-கிழக்கு இணைப்புக்கு கிழக்கு மக்கள் எதிர்ப்பு என்ற கருத்தை (வாக்கெடுப்பு எதுவும் நடத்தாமலே) திணிக்க முயலும் ஒருவர், தமிழர் தாயகக் கோட்பாட்டை அங்கீகரித்து தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பார் என்று எப்படி எதிர்பார்ப்பது? அதாவது இவரது பதவிக் காலத்தில் தமிழர்கள் ஏற்கக்கூடிய, நியாயமான ஒரு தீர்வு பிறப்பதற்குச் சாத்தியமே இல்லை!

வடக்கு-கிழக்குப் பிரச்சினை தமிழர் பிரச்சினை அல்ல. அது பயங்கரவாதப் பிரச்சினையே. பயங்கரவாதத்தை ஒழித்தால் வடக்கு - கிழக்குப் பிரச்சினை தீர்ந்து போகும் என்ற வெறித்தனமான கருத்துக்களை ஏற்கனவே வெளியிட்டவர் ஜனாதிபதி. இப்போது கிழக்கு மக்கள், வடக்கு - கிழக்கு இணைப்பை விரும்பவில்லை என்று கூறுவது, அதனை பதித்துக் கொள்ள முயல்வது தமிழர் பிரச்சினைக்கு அரசு எந்தக் காலத்திலும் ஒரு தீர்வை முன் வைக்கப்போவதில்லை என்பதற்குக் கட்டியம் கூறுவதாகும்!

# தீர்வுக்கான அவசியத்தை சிலரே உணர்ந்துள்ளனர்

## அமெரிக்கத் தூதர் கூறுகிறார்

கொழும்பு, செப். 7

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண வேண்டியதன் அவசியத்தை கொழும்பில் மிகச் சிலர்தான் உணர்ந்துள்ளார்கள் போல் தெரிகிறது. இது குழப்பத்தைத் தருகிறது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதர் திருமதி தெரிசிற்றா ஷாபர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த அசிரத்தைக்குக் காரணம் அடிக்கடி இடம்பெற்ற நம்பிக்கை துரோகங்களும் உடன்பாடுகள் மீறப்பட்டமையாகவும் இருக்கலாம் என்று திருமதி ஷாபர் ஐ நாவின் இலங்கைக் கிளைக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார். இலங்கை பற்றி நேரடியாக அவர் தமது பேச்சில் பிரஸ்தாபிக்காவிட்டாலும் ''யுத்தத்தில் ஈடுபட்டுள்ள தரப்பினர் முதலில் சமாதானத்தைக் காண வேண்டும். அதன் பின்னரே அமைதி காப்பது சாத்தியமாகும்'' என்றும் தெரிவித்தார்.

(இ-எ)

## ஜனசக்தி திட்டத்தின் கீழ் அபிவிருத்தி வேலைகள்

யாழ்ப்பாணம், செப் 7

ஜனசக்தி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் உதவியுடன் பல அபிவிருத்தித் திட்டங்களை மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் மேற்கொள்ளவிருக்கிறது.

ஜனசக்தி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பங்காளராக நியமனம் பெற்றுள்ள மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்கம் மேற்கொள்ள உத்தேசித்துள்ள அபிவிருத்தித் திட்டங்களின் விவரங்களை ஜனசக்தி நம்பிக்கை பொறுப்பு நிதிய அதிகாரி திரு. ஆனந்த வீரசேகரா கோரியுள்ளார்.

(த-8)

## கட்டடத் தொழிலாளர்கள் நிவாரணம் இன்றி அவதி

யாழ்ப்பாணம், செப். 7

சீமெந்து கட்டடத் தொழிலாளர்களுக்கான நிவாரணத்தை மீண்டும் வழங்குக.

சீமெந்து கட்டடத் தொழிலாளர் சங்க உடுவில் கிளை உடுவில் உதவி வலி தெற்கு அரசாங்க அதிபரிடம் மேற்கண்டவாறு கோரி உள்ளது.

சீமெந்துக் கட்டடத் தொழிலாளர்களுக்கான நிவாரணம் கடந்த நான்கு மாதங்களாக வழங்கப்படவில்லை. இதனால் தொழிலாளர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். சைக்கிளில் விறகுகட்டி விற்கும் பரிதாப நிலையில் அவர்கள் இருந்து வருகின்றனர் என்று இது தொடர்பான மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## மக்களைத் தயாராகுமாறு சுவரொட்டி மூலம் அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 7

தமிழீழ போராட்டம் வெற்றிகாண, தமிழீழ மக்கள் ஒன்று திரண்டு எதிரிக்கு எதிராக போராட சுவரொட்டிகள் மூலம் அறைகூவல் விடுக்கப்பட்டுள்ளது.

''வருகின்றான் எதிரி தமிழனை அழிக்க, வருகின்ற எதிரியை எல்லையில் சந்திப்போம்''

''தமிழனின் மண்ணை தனதென்கிறான் எதிரி, வீரமிகு இனமெனக் காட்டுவோம் வாரீர்!''

''எங்களின் தேசம். இது எங்களின் தேசம். அந்நியன் ஆள்வது அநியாயமன்றோ!''

''வழிவிட்டு வழிவிட்டு வாழ்விடம் இழந்து விட்டோம். இனி தலை நிமிர்ந்து நிற்போம் போராட்டமே புதுவாழ்வு தரும்.''

''போர் மேகம் சூழ்கிறது. புறப்படு தமிழா! பிரபாகரன் காலத்தில் புதுவாழ்வினைப் படைத்த பெருமை எங்களுக்காக புறப்படு.''

இப்படியான வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் யாழ். நகரின் சகல இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ளன.

இக்கருத்து அடங்கிய தெருக் கூத்துக்களும் மக்கள் குழுக்களால் தினமும் இரவு வேளைகளில் கிராமங்களில் நடத்தப்படுகின்றன. (இ-15)

## கௌரவிப்பு

நவாலி முருகமூர்த்தி கோவிலின் மகோற்சவ தினங்களில் ''பன்னிரு சைவத் திருமுறைகள்'' பற்றித் தொடர் தெய்வீகப் பேருரை நிகழ்த்திய திரு மு. க. மாசிலாமணியைப் பாராட்டி பொன்னாடை போர்த்தும் விழா கடந்த முதலாம் திகதி நடைபெற்றது.

(ச)

## பிரேமதாசாவின் சொத்து குறைத்து காட்டப்பட்டதா?

### ரூபா 89 லட்சத்துக்கு அதிகமாம்

கொழும்பு, செப். 7

மறைந்த ஜனாதிபதி பிரேமதாச விட்டுச் சென்ற சொத்துக்கள் மற்றும் உடைமைகளின் மதிப்பு, உண்மையான மதிப்பிலும் பார்க்க மிகக் குறைவாகவே நீதிமன்றத்துக்குக் காட்டப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

பிரேமதாச மரணசாசனம் எழுதாமல் இறந்ததினால், அவருக்குரிய சொத்துக்களை பிரிப்பது பற்றிய தத்துவ உரிமை வழக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதில் அவரது சொத்துகள் மற்றும் உடைமைகளின் பெறுமதி 89 லட்சம் ரூபா எனக் காட்டப்பட்டு உள்ளது. உண்மையான மதிப்பு அதிகம் என்று முறையிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான முறைப்பாடு வரும் பட்சத்தில் விசாரணை ஒன்றை நடத்தத் தாம் தயாராக இருப்பதாக புதிய இறைவரித் திணைக்கள ஆணையாளர் நளின் மெண்டிஸ் தெரிவித்திருக்கிறார்.

(இ-எ)

## மார்க்கோஸின் சடலம் பிலிப்பீன்ஸ் வருகிறது

மணிலா, செப். 7

பிலிப்பீன்ஸின் முன்னாள் ஜனாதிபதி பெர்டினன்ட் மார்கோஸின் சடலம் ஹவாய் தீவிலிருந்து பிலிப்பீன்ஸுக்கு இன்று செவ்வாய்க்கிழமை கொண்டு வரப்படவுள்ளது.

சடலத்தை தலைநகர் மணிலாவுக்குக் கொண்டு வராமல் பிலிப்பீன்ஸில் உள்ள அவரது சொந்த ஊருக்கு நேரடியாகக் கொண்டு செல்ல ஜனாதிபதி பிடல்ரமோஸ் அனுமதி வழங்கியுள்ளார்.

மக்கள் எழுச்சி காரணமாக 1986 இல் நாட்டை விட்டு தப்பியோடிய மார்க்கோஸ் அமெரிக்காவின் ஹவாய்தீவில் 1989 இல் காலமானார்.

அவரின் உடலை பிலிப்பீன்ஸுக்குக் கொண்டு வர அப்போதைய ஜனாதிபதி அக்கியூனோ அனுமதி மறுத்ததன் காரணமாக அச்சடலம் ஹவாய் தீவில் கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

கணவரின் சடலத்தை எடுத்து வருவதற்காக இமெல்டா மார்கோஸ் ஹவாய் தீவுக்கு சென்றுள்ளார்.

(உ-எ)

# வட - கிழக்குக்கு தனியான கூட்டுறவுச் சபை நிறுவுக!

## திருமலை மாநாட்டில் தீர்மானம் வரும்

யாழ்ப்பாணம், செப். 7

தேசியக் கூட்டுறவுச் சபையின் புறக்கணிப்பு, வெளிநாட்டு உதவிகள் சரிவரக் கிடைக்காமை, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள கூட்டுறவுச் சபைகளின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளமை —

ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு தனியான கூட்டுறவுச் சபை ஒன்றை அமைக்க வேண்டும்.

எதிர்வரும் 23ஆம் திகதி திருமலையில் நடைபெற உள்ள வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மாநாட்டில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை இவ்வாறான கோரிக்கையை முன்வைக்க உள்ளது.

திருமலை கூட்டுறவுத் திணைக்களத் தலைமை அலுவலகத்தில் 3 நாட்கள் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் கூட்டுறவு சபைகளின் தலைவர்கள் மற்றும் [illegible]கள் கலந்து கொள்ள உள்ளனர்.

மாநாட்டில் முன்வைக்கப்பட உள்ள மேலும் சில கோரிக்கைகள் வருமாறு!

★ மக்கள் வங்கி குறிப்பாக தமிழ் பகுதிகளில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களுக்கு போதியளவு உதவிகளை வழங்காமையினால் தமிழ்ப் பகுதிகளில் கூட்டுறவு வங்கிகளை விரைவாக அமைக்க வேண்டும்.

★ 1989ஆம் ஆண்டு மாவட்டக் கூட்டுறவுச் சபைகள் நிறுவப்பட்ட பொழுது பல்வேறு மட்டங்களிலும் அளிக்கப்பட்ட உறுதிமொழிகளுக்கு அமைவாக இதுவரை வழங்கப்படாது இருக்கும் கூட்டுறவு நிதியை தொடர்ந்து வழங்குதல் வேண்டும்.

★ மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடத்தப்படும் கூட்டுறவுப் பயிற்சி நெறிகளுக்கு [illegible] கைக்கு ஏற்ப கூட்டுறவு அபி[illegible]டும்.

★ வடகிழக்கு மாகாண வரவு செலவுத் திட்டத்தில் ஏனைய துறைகளில் கல்வி அபிவிருத்திக்கு ஒதுக்குவது போன்று கூட்டுறவுக் கல்வி அபிவிருத்திக்கும் நிதி ஒதுக்க வேண்டும்.

★ கூட்டுறவுத் திணைக்களமும் உத்தியோகத்தர்களும் பிரதேச செயலகின் அலுவலகத்துடன் இணைக்கப்படும் பட்சத்தில் மாவட்ட கூட்டுறவுச் சபைகளும், சமாசங்களும் — மாவட்ட மட்டத்தில் இருக்கும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அல்லது மாவட்ட ஆணையாளர் அல்லது வடகிழக்கு கூட்டுறவு ஆணையாளரினால் மேற்பார்வை செய்யப்பட வேண்டும்.

(த-162)

## இன்று

தென்மராட்சி, செப். 7

சாவகச்சேரி நகர்ப் பகுதி வர்த்தகர்களுக்கான விசேட கூட்டம் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(உ-117)

## நாளை

குருதேவர் சிவானந்த மகரிஷி அவர்களின் 106ஆம் ஜெயந்தி விழா யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நாளை புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் பூஜை, ஜெபம், பஜனையோடு கொண்டாடப்படும்.

(ச)

## அதிபர்கள் கூட்டம்

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தில் வட்டுக்கோட்டை, சுழிபுரம், பண்டத்தரிப்பு, காரைநகர் கொத்தணிப் பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்களுக்கான கூட்டம் இன்று செவ்வாய் நண்பகல் 12 மணிக்கு வட்டு திருஞானசம்பந்தர் வித்தியாசாலையிலும்—

தெல்லிப்பழை, அம்பனை, மல்லாகம், இளவாலை, காங்கேசன்துறை, அளவெட்டி ஆகிய கொத்தணிகளைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மருதனார்மடத்தில் இயங்கும் யூனியன் கல்லூரியிலும் நடைபெறும்.

## கிழக்கு முகாம்களுக்கு அமைச்சர் விஜயம்

கொழும்பு, செப். 7

உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சரும் வெளிவிவகார இராஜாங்க அமைச்சருமான ஜோன் அமரதுங்க கிழக்கில் உள்ள முன்னணிப் பாதுகாப்பு நிலைகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

அம்பாறைப் பகுதியில்—கஞ்சிகுடிச்சாறு, காரைதீவு, பாணமை, பக்மிட்டியாவ [illegible]சாகாமம் ஆகிய இடங்களில் உள்ள— அதிரடிப்படை முகாம்களுக்கே மூத்த படை அதிகாரிகளுடன் அவர் நேற்று சென்றார்.

(உ 3-6)

## போர் முரசு

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டு பிரிவினரால் 'போர் முரசு' என்னும் தெருக்கூத்து தற்போது சகல இடங்களிலும் வீதிகளில் நடத்தப்பட்டு வருகின்றது.

## புதிய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போகிறது. விரைவில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை நாங்கள் பார்க்கலாம்.'' — என்றார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

பாதுகாப்பு அமைச்சராகவோ பந்தோபஸ்து அமைச்சராகவோ ஒருவரும் நியமிக்கப்படவில்லை. பாதுகாப்புச் செயலாளர் பதவிக்கும் ''சிவிலியன்'' எவரும் நியமிக்கப்படவில்லை.

அதாவது பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கூடிய அரசியல் திட்டம் ஒன்றை செயற்படுத்தத் தக்க வகையில்—

சூழ்நிலையை உருவாக்குவதற்கு படையினரையும் படை நடவடிக்கைகளையும் வழிநடத்திச் செல்ல அரசியல் தலைமைத்துவம் இல்லாத நிலையே காணப்படுகிறது.

இது இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வையே அரசு விரும்புகிறது என்பதைக் காட்டுகிறது. என்றார் (உ-3)

## அதிமுக...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாமண்டூர், சைதாப்பேட்டை சம்பவங்கள் குறித்து விசாரணைகள் தீவிரப்படுத்தப்படாமை இந்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாக அவர் மேலும் கூறினார்.

தமிழ் நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமை சீர்குலைந்து வருவதாகத் தெரிவித்த அவர் —

ஆயுதங்களை ஏற்றிக் கொண்டு கனடா நாட்டுக் கப்பல் ஒன்று கிழக்கு கடற்கரை நோக்கி வருவதாகக் கிடைத்துள்ள செய்திகளை மாநில அரசு அசட்டை செய்யக் கூடாது என்றும் சொன்னார்.

(த-ச)

காடு வளர்க்க
பாடு படுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை நடைபெறும் கால் இறுதியாட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ 3.30 மணி: கலைவேசன் துறை ம. வி. ''ஏ'' அணி எதிர் மோகனதாஸ் 'ஏ' அணி

★ 4.30 மணி: ஏ. எஸ். எஸ். வி அணி எதிர் ஆவரங்கால் ம. வி. க. ''பி'' அணி

o o o

காரைநகர் தோப்புக்காடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில்நுட்ப நிறுவன விளையாட்டு மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3 30 மணி: ஞானமுருகன் அணி எதிர் ஏ. எல். 'பி' அணி

★ 4.30 மணி: றோயல் அணி எதிர் கலைவாணி 'பி' அணி

(உ)

# அமைச்சரவை மாற்றத்துக்கு ஐ.தே.க. கட்சிக்குள் அதிருப்தி

கொழும்பு, செப். 7

ஜனாதிபதி விஜேதுங்கா அண்மையில் மேற்கொண்ட அமைச்சரவை நியமனங்கள் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் எம். பிக்கள் மத்தியில் அதிருப்தியை உருவாக்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

### தென்மாகாணம் புறக்கணிப்பாம்

தெற்கைச் சேர்ந்த எம். பிக்கள் மத்தியில் இந்த அதிருப்தி நிலவுவதாகவும் கூறப்படுகிறது.

தற்போதைய அமைச்சரவையில் மேற்கு மாகாணத்தைச் சேர்ந்த நால்வர் இடம்பெற்றுள்ளனர். அதே சமயம் தென்மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் மட்டுமே அமைச்சராக உள்ளார் என்று தென் பகுதி எம் பிக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

அமைச்சர்கள் நியமனத்தில் ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள கண்டி கொய்கம பெரும்புள்ளிகளின் செல்வாக்கு பிரயோகிக்கப்படுவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## ஆலயங்களில்

வடமராட்சி, செப். 7

சரித்திரப் பிரசித்திபெற்ற துன்னாலை வடக்கு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி இருபதாவது விழா நாளை புதன்கிழமை விசேட அபிசேக, பூசைகளுடன் விமரிசையாக நடைபெறவுள்ளது.

நாளை நண்பகல் மூலஸ்தான ஸ்ரீசக்கரத்துக்கு விசேட அபிஷேகம் நடைபெறும்.

நள்ளிரவு 12 மணிக்கு ''கண்ணன் பிறப்புத் தரிசனம்'' நடைபெறுவதைத் தொடர்ந்து அபிசேகம், குழந்தைக் கண்ணன் தாலாட்டுப் பாட்டுடன் அழைத்து வந்து வசந்தமண்டபத்தில் அமர வைக்கும் நிகழ்வு இடம் பெறும்.

சமயப் பேருரை, பட்டிமன்றம், நாடகம் ஆகியனவும் விழாவில் இடம்பெறும்.

(அ-178)

o o o

அளவெட்டி தெற்கு ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தான ரதோற்சவம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

அன்று மாலை 7 மணிக்கு உறியடி உற்சவமும், நாளை மறுதினம் 11 மணிக்கு தீர்த்தமும், 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு திருக்கல்யாணமும் இடம் பெறும். (த-51)

o o o

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும். (த-89)

o o o

அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் இயற்றிய ''ஸ்ரீ நாராயணப் பெருமான் 108 திருத் தலங்கள்'' என்னும் தோத்திரப் பாடல் திரட்டு நூல் வெளியீடு நாளை அளவெட்டி நாகேஸ்வரம் தேவஸ்தான தேர்த் திருவிழாவின் போது நடைபெறும். (த-51)

o o o

யாழ். அடைக்கல அன்னை ஆலயப் பெருவிழா நாளை புதன்கிழமை நடைபெறும்.

நாளை காலை 6 15 மணிக்கு நடைபெறும் திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலியில் யாழ் ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் கலந்து சிறப்பிப்பார்.

மாலை 4.30 மணிக்கு திருச்சொரூப பவனி நடைபெற்று சொரூப ஆசீர்வாதம் இடம் பெறும். (த-51)

o o o

சாவகச்சேரி சப்பச்சிமாவடி ஸ்ரீ சக்கர ஆழ்வார் ஆலய கிருஷ்ண ஜெயந்தி விழா நாளை புதன்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். அன்றைய தினம் அருள்மொழிச் செல்வர் கனகசபாபதி நாகேஸ்வரனின் கதாப் பிரசங்கமும் இடம்பெறும்.

(த-117)

o o o

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் நாளை புதன்கிழமை மாலை 4-30 மணி தொடக்கம் நள்ளிரவு 12-30 மணி வரை நடைபெறும். (அ)

## கூட்டுப்படை கட்டளையகம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிடுவது, வகுப்பது முடிவு செய்வது, நடைமுறைப் படுத்துவது ஆகியவற்றுக்கும்—

பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு பொறுப்பாக இருக்கும்.

கூட்டுப்படைத் தலைமையகத்தின் செயற்பாடுகள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவால் இல்லாமல் செய்யப்பட்டன.

அதற்குப் பதிலாக முப்படைத் தளபதிகளையும், பொலிஸ் மா அதிபரையும் கொண்ட கூட்டு பாதுகாப்பு படை அப்போது உருவாக்கப்பட்டது.

இந்த கூட்டுப்பாதுகாப்பு படை விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ரெரன்ஸ் குணவர்த்தனா தலைமையில் செயற்பட்டது.

அது ஏழு மாதங்களாக இயங்கிய பின்னர், அதனைக் கலைத்துவிட்டு திரு. பிரேமதாஸா கூட்டுப்படைத் தலைமையகத்தை மீண்டும் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஆரம்பித்தார்.

கடந்த 11 மாதங்களாக ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தலைமையில் இயங்கிய இக்கூட்டுப்படை தலைமையகம் இதுவரை எந்தவித உருப்படியான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை எனவும்—

மாறாக இராணுவ நடவடிக்கைகளில் தடுமாற்றங்களும் குழப்பங்களுமே இடம்பெற்றன எனவும் பரவலாகச் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து தற்போது புதிய மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### பழையது

செயல்வலுவற்று, இடைநிறுத்தப்பட்ட பழைய கூட்டமைப்பு ஒன்றை அப்படியே மீண்டும் புதிய பெயருடன் ஆரம்பித்து இருப்பதே தற்போதைய நடவடிக்கை என அரசியல் அவதானிகள் கருத்து கூறியுள்ளனர்.

மணலாறு மணலாற்று/ மணிகண்டிமலை இராணுவ முகாம் மீது புலிகள் நடத்திய பாரிய தாக்குதல், ஸ்ரீலங்கா இராணுவ தலைமையில் பெரும் கருத்து வேற்றுமைகளைத் தோற்றுவித்துள்ள நிலைமையில், விடுதலைப் புலிகள் கடற்படைப் படகுகள் மூன்றைத் தகர்த்தனர்.

இவற்றையடுத்து ஸ்ரீலங்கா படைத்துறை தலைமையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன.

இந்த நிலையில் கூட்டுப் படை தலைமையக தளகர்த்தர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா மலேசியாவுக்குச் சென்றிருந்தார்.

கூட்டுப்படைத் தலைமையகத்தின் அதிகாரம் தொடர்பாக அதன் தளகர்த்தரான ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவுக்கும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்தினாவுக்கும் மற்றும் மூத்த படை அதிகாரிகளுக்கும் இடையில் பலத்த கருத்து வேற்றுமைகள் நிலவி வந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து கூட்டுப் படை தலைமையகத்தை கலைத்துள்ள ஜனாதிபதி முன்னர் ''ஜே. எஸ். எவ்'' என்ற பெயரில் (கூட்டுப் பாதுகாப்புப் படை) இயங்கிய அமைப்பு போன்ற ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் பலத்த தாக்குதலால் அதிக இழப்புக்கள் ஏற்படும் போதும் படைத்துறை நடவடிக்கைகளில் பின்னடைவுகள் நிகழும் போதும் படைத்துறை கட்டமைப்பில் ஸ்ரீலங்கா அரசு இப்படியான மாற்றங்களை செய்து வருவது வழக்கம் என ''புலிகளின் குரல்'' சுட்டிக்காட்டியது.

(உ-3)

## ஓரிரு நாட்களில் வாதுவ வரும் ''குமணி'' அடுத்த வாரத்தில்

திருகோணமலையில் மாவுடன் தரித்து நிற்கும் 'வாதுவ' கப்பல் ஓரிரு நாட்களில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் பொருள்கள் ஏற்றிக் கொண்டிருக்கும் ''குமணி'' கப்பலும் அடுத்த வாரம் பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கிறது.

தற்சமயம் பருத்தித்துறையில் நிற்கும் 'குமாரி' கப்பலில் இருந்து பொருள்களை விரைவாக இறக்க ஏற்பாடு செய்யுமாறு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு யாழ். செயலகத்தை கேட்டுள்ளது.

உரம் மற்றும் கிருமிநாசினிகளை இறக்கி விட்டு 'றுகுணு' கப்பல் இன்று காலை கொழும்பு செல்லவிருக்கிறது.

(உ-S-178)

## 15 பொலிஸ் அதிபர்கள் விரைவில் நியமிக்கப்படுவர்

புதிதாக 15 பொலிஸ் அதிபர்களும் 65 உதவி பொலிஸ் அதிபர்களும் விரைவில் நியமனஞ் செய்யப்படவிருக்கிறார்கள்.

உதவிப் பொலிஸ் அதிபர் பதவிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கு 300 பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர்களும்—

பொலிஸ் அதிபர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு 65 உதவிப் பொலிஸ் அதிபர்களும் அழைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இதேவேளை—

நிரப்பப்படும் பதவிகளின் எண்ணிக்கையிலும் பார்க்க கூடுதலானோரை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்திருப்பது சில பொலிஸ் வட்டாரங்களில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பதவி உயர்வு தொடர்பாகக் கடைப்பிடிக்கப்படும் முறைக்கு இது முரணானது என்று குறை கூறப்பட்டுள்ளது.

எனினும் இது பொலிஸ் திணைக்களத்தின் நடவடிக்கை சட்டத்துக்கு ஒழுங்காக அமைந்துள்ளது என்று அரச தரப்பில் காரணம் கூறப்பட்டுள்ளது. (த-எ)

M.E.C. Railway Road, Kantharmadam.

94 A/L இரசாயனவியல்
மீட்டல் வினா - விடை வகுப்புகள்
ஆரம்பம்: 07 - 09 - 1993
ஆசிரியர்: செல்வா B. Sc (Hon)
94, 95 பிரிவுகளும் நடைபெறுகின்றன.
மக்மிலன்
கல்வி நிலையம்
(6465)

MATHS CENTRE
NELLIADY
A/L 94 One Year Course
※ பௌதீகம் — திரு. ஜெயசீலன்
ஆரம்பம்: 07 - 09 - 1993
செவ்வாய் 3-15 p.m.
(பாடவிதானம் பற்றிய விவரங்களை நேரில் பெற்றுக்கொள்ளவும்.)
(கி-6050)

யாழ். மாவட்ட சகல வர்த்தகர் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும் ஊழியர்களுக்கும் வட பிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாசம் விடுக்கும்

## ஓர் முக்கிய அறிவித்தல்

இன்று 07-09-93 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஓர் முக்கிய கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இரு பகுதியினருக்கும் இது முக்கியமான கலந்துரையாடலாக இருப்பதால் சகல வர்த்தக உறுப்பினர்களும், ஊழியர்களும் தவறாது கூட்டத்தில் பங்குபற்றுமாறு பணிவாக கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

இங்ஙனம்
தலைவர்
வட பிராந்திய வர்த்தகர்
சங்கங்களின் சமாசம்

(கி-6051)

### உண்மையான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்திக் கொள்வது இலகுவாக இருக்கும்.''

—யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் கொழும்பில் வைத்து அண்மையில் ''லங்காதீப'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

யுத்தத்தினால் இடம் பெயர்ந்துள்ள இரண்டு லட்சம் மக்கள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர் என்றார் அவர்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியப்படாது எனக் கூறிய யாழ். அரச அதிபர், இந்த யுத்தத்தை இனப பிரச்சினைக்கான தீர்வு மாத்திரம் ஒரு ... பெரும் பேச்சுவார்த்தை மூலமே ... வேறு வழி இல்லை என்றும் சொன்னார். (உ-162)

### மஹர...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யைச் சம்பவங்களில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் என்றும் தெரிவிக்கப் பட்டது.

கைதிகளின் தாக்குதல்களினால் காயமுற்ற சிறைப்பாதுகாவலர் ஐவர் றாகம ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். [உ-6]

## மரண அறிவித்தல்

### நீற்றம்மா மரியாம்பிள்ளை
(ஜெயசீலி)

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 130, மவுண்காமேல் வீதியில் வசித்தவருமாகிய நீற்றம்மா (ஜெயசீலி) மரியாம்பிள்ளை 5-9-93 இல் கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற பேதுருப்பிள்ளை மரியாம்பிள்ளை (சூசைப்பிள்ளை) - அன்னம்மாவின் அன்பு மகளும், வஸ்தியாம்பிள்ளை மரியாம்பிள்ளை (முன்னாள் கடற்படை உத்தியோகத்தர், திருமலை) அவர்களின் அன்பு மனைவியும், மேரி அன்ரனற் (சாந்தி), மரியசீலன் (லண்டன்), மரியசகாயபாலன் (பிரான்ஸ்), மரியஜெனற் ஆனந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும், பீற்றர் கில்பிறட், போல் குலசிங்கம், அருட்திரு பி. எம். இம்மானுவேல் (பங்குத் தந்தை பருத்தித்துறை), அருள்நாதன், வினிபிறட் நாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், வே. மரியநாயகம் (விவசாயப் போதனாசிரியர்), மரியா மரியசகாயபாலன் (பிரான்ஸ்), லெஸ்லி ஜெயந்தன் (பொறியியலாளர், பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிருபிகா, பிரதீபா, சோனியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், றெஜீனா பீற்றர் (இளைப்பாறிய ஆசிரியை), சின்னமணி குலசிங்கம், மரிய கொறற்றி அருள்நாதன், சிதம்பரநாதன் (லண்டன்), வ. அந்தோனிப்பிள்ளை (திருமலை), காலஞ்சென்ற திருமதி பஸ்ரியாம்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் கொழும்பில் நடைபெற உள்ளது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அன்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அறியத்தருகின்றேன்.

தகவல்:
அருட்திரு பி. எம். இம்மானுவேல்
(சகோதரன்)

பங்குத்தந்தை,
பருத்தித்துறை. (27211)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 898/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 07-09-1993 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org